# முத்தமிழாயம் வழங்கும் இலக்கியப்பதாகை (பறப்பு:3)




"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்

செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்."

எனும் குறளுக்கேற்ப, அறமும் அன்பும் இயைந்து, இன்சொலால் அனைவரையும் கவர்ந்த திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனாரின் நினைவாக, விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உட்பட்ட ஆறுபடைவீடு தொழிற்நுட்ப வளாகம் - கலை மற்றும் அறிவியல் புலத்தின் சார்பில் மூன்றாம் நிகழ்வாக ஏப்ரல் - 20 இலக்கிய பதாகை (பறப்பு -3 ) நிகழ்வு நடந்தேறியது.






இலக்கியத்திற்கு பல வடிவங்கள் உள்ளன. அதில் நகைச்சுவையும் ஒன்று. விகடகவிகள் பல பேர் வாழ்ந்து இருக்கிறார்கள். தமிழ்த்துறை இலக்கியப் பதாகை – (பறப்பு 3 - ல்) திரு: இரமேஷ்வைத்யா (திரைப்பாடலாசிரியர், வசனகர்த்தா, பத்திரிகை ஆசிரியர், குழந்தைகள் எழுத்தாளர்) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களிடம் “லகலகப்பு” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

சமீபத்தில், ‘இருட்டு எனக்குப் பிடிக்கும்’ குழந்தைகள் நாவலுக்காக விகடன் விருது பெற்ற இவர், ஒரு விகடகவியாக தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். அஷ்டவதானியான அவர், பாடல்கள் எவ்வாறு இசைக்கு ஏற்றவாறு திரைப்பாடல்களாக மாறுகிறது? புாடலாசிரியரின் பங்கு என்ன? பிறப்பு முதல் இறப்பு வரை மனிதர்கள் வாழ்வில் பாடல்கள் பெறும் இடம் என்ன? தமிழ்மொழி படித்து மாணவர்கள் முன்னேற முடியுமா? மொழியின் முக்கியத்துவம் என்ன? தமிழில் ராக் (rack) பாடல்கள் பாடுவது எவ்வாறு? கவிதையின் எளிமை எது? தற்போதைய சினிமாவின் போக்கு எவ்வாறு உள்ளது? செந்தமிழ்ச் சொற்களாக வெளிவரும் பக்திப்பாடல்கள் (முத்தைத்தரு பத்திதிரு….. முருகன் பாட்டு, திருப்பாவைப்பாடல்கள்) போன்ற பாடல்களை பாடிக் காட்டியும் பல்வேறு கோணங்களில் சிந்தித்து தம் கருத்துக்களை பதிவு செய்தார். மேலும் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் வினாக்களுக்கு நகைச்சுவையாக பதில் கொடுத்து அசர வைத்தார். வட்டார வழக்கு, கவிதை மொழி, பாடல் வரிகளுமாக அவர் உரை சிறப்பாக அமைந்து இருந்தது. தலைப்பிற்கு ஏற்றபடி மாணவர்கள் கலகலப்பாக உணர்ந்து மகிழ்ந்திருந்தனர்.



ரமேஷ்வைத்யா அவர்களின் பல்வேறு திறமைகளைப் பற்றி எடுத்தியம்பி, அருமையாக அறிமுக உரையை கவிஞர் பிருந்தா அவர்கள் வழங்கினார்.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் ஆதரவையும் மேதகு டாக்டர். அ.ச.கணேசன் (வேந்தர்) அவர்கள், டாக்டர்.அனுராதா கணேசன் (இயக்குநர்) அவர்கள், மற்றும் முனைவர்.மு.பொன்னவைக்கோ (முதன்மை கல்வி அதிகாரி)

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், முனைவர் ஆர்.சண்முகவள்ளி (இயக்குநர்) கலை மற்றும் அறிவியல் புலம் அவர்களும் அளித்தனர்.

தமிழ்த்துறை சார்பில் முனைவர் ப.ஜெயபாரதி (துறைத்தலைவர்), திரு. அ.முத்துக்குமார் (உதவிப்பேராசிரியர்) ஆகியோர் விழா ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்விழா, மாணவ மாணவியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள், மற்றும் அனைத்து துறை சார்ந்த பேராசிரிய பெருமக்களின் ஆதரவுடன் இனிதே நடை பெற்றது.

